ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
புல்கலைக்கழகத்தினாலும் பல்கலைக்கழகத்திற்கு எதிராகவும். தாக்கல் செய்யப்பட்டு விசாரிக்கப்படும் 03 வழக்குகள் தொடர்பில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 100ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிக் கொணரப்படவில்லை.	விசாரிக்கப்பட்டு வரும் 03 வழக்குகள் தொடர்பில் 2024 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிக் கொணரப்படும் போது, தவறுதலாக விடுபட்டுள்ளதால் அது தொடர்பிலான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நடைமுறை அல்லாத சொத்துக்களுள் உள்ளடங்கும் தரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் (Quality Improvement Projects) கீழ் Strengthen Research இற்காக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 2,365,142 மீதி ஆண்டிறற்குள்ளேயே முழுமையாக தீர்க்கப்பட்டிருந்தாலும் அது தொடர்பான கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிக்கொணரப்பட்டு இருக்கவில்லை.	நடைமுறை அல்லாத சொத்துக்களில் உள்ளடங்கும் ஆண்டுடன் தொடர்படைய ஆராய்ச்சிச் செலவுகள் முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளதுடன் தீர்த்தல் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிக்கொண்டு வருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	தீர்த்தல் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிக்கொணரப் பட வேண்டும்.

1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	Centre of Excellence in Sustainable Tourism (CESTour) செயற்றிட்டம் மற்றும் ஆராய்ச்சி செயற்றிட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட முறையே பெறுமதி ரூபா 3,701,180 கொண்ட E-Books மற்றும் பெறுமதி ரூபா 855,500 கொண்ட Ultrasonic Probe Sonicator இயந்திரத்தை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்றிட்டம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்ட காரணத்தினால் 2024 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட E-Books இன் பெறுமதி அருவ சொத்துக்களாக மூலதனமாக்கப்படவில்லை. தொடர்புடைய செயற்றிட்டத்திற்கான நிறைவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர் அந்த செய்றிட்டத்திற்குரிய சொத்துக்களை பல்கலைக்கழகத்திற்கு கையகப்படுத்தி வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும்.	சொத்துக்கள் துல்லியமாக மூலதனமாக்கப்பட வேண்டும்.
(ஆ)	சிங்கராஜ செயற்றிட்ட மானிய நிதியம் மற்றும் பல்கலைக்கழகத்தின் 10 நிதிகளில் இருக்கும் பண முதலீட்டிலிருந்து மீளாய்வாண்டில் ஈட்டப்பட்ட ரூபா 13,484,063 வட்டி வருமானம் ஆண்டின் வருமானமாக அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	சிங்கராஜ செயற்றிட்ட மானியங்கள் மற்றும் சிறப்பு நிதியங்கள் தொடர்பாக திறக்கப்பட்ட நிலையான வைப்புத் தொகைகளுக்கான வட்டி பல்கலைக்கழகத்தின் நானாவித வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்படாது தொடர்புடைய செயறிட்டக் கணக்கு மற்றும் சிறப்பு நிதியக் கணக்குகளில் வரவு வைக்கப்படும். சிங்கராஜ செய்றிட்டம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற வட்டி வருமானத்தில் இருந்து அந்தச் செயற்றிட்டத்திற்குரிய குறித்துரைக்கப்பட்ட செலவுகளை நிதிக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க ஏற்கப்படுகிறது.	காலப்பகுதிக்குரிய வருமானங்கள் துல்லியமாக அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் தெரிவிக்கப்பட வேண்டும்.

(இ)	கடந்த ஆண்டிற்காக செலுத்தப்பபட்ட ரூபா 1,281,480 கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டில் செலவாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் ரூபா மீளாய்வாண்டில் மேலதிகம் அந்த அளவிலான் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே, மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்கு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு இருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டிற்குரிய செலவாக இருந்தாலும் அதற்காக நிதிகளை ஒதுக்குவதற்கு 2024.01.15 ஆம் திகதியளவில் கொடுப்பனவுப்பட்டியல்/இன்வொய்ஸ்கள் வராத காரணத்தால் திரட்டப்பட்ட செலவுகளின் கீழ் ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.	ஆண்டிற்குரிய செலவுகள் துல்லியமாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(ஈ)	உணவகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்காக பல்கலைக்கழக நிதியிலிருந்து செலுத்தப்பட்ட பல்கலைக்கழக நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 11,154,355 பணம் அறவிடப்பட வேண்டியவை என கணக்கு வைக்கப்பட்டு இருக்கவில்லை.	உணவகத்திற்கு வெளியே சுத்தம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 3,279,892 தொகை குறைக்கப்பட வேண்டும் என்பதுடன் சமையல் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் 2024 பெப்ரவரி 20ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதுவரை செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப் பட்டுள்ளதுடன் மீளச் செலுத்துவதை நிராகரித்துள்ளனர்.	பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை துல்லியமாக அடையாளம் காணப்பட்டு, உரிய சரிசெய்தல்களை நிதிக் கூற்றுக்களில் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மூலதனம் மற்றும் மேல்நிலைச் செலவுகளுக்காக செலுத்த வேண்டிய முறையே ரூபா 780,290 மற்றும் ரூபா 932,085 கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2025.01.10ஆம் திகதி வரையில் முலதனப் பணிகளுக்கு செலுத்த வேண்டிய இறுதி கட்டணப்பட்டியலின் பெறுமதி குறித்துரைக்கப்பட்டு தீர்மானிக்கப்படாத காரணத்தால் 2024 ஆம் ஆண்டு தொடர்பான நானாவித கடன் வழங்குநர்களின் கீழ் தொடர்புடைய ஒதுக்கீடுகள் செய்யபடப்டு இருக்கவில்லை.	காலப்பகுதிக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் துல்லியமாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	2022 ஒக்டோபர் 12ஆம் திகதி முடிக்கப்பட்டு பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட பெறுமதி ரூபா 81,729,192 தொகை மாற்று நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் காணி மற்றும் காணி மேம்படுத்தலின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தாலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் படி ஆண்டுதோறும் தேய்மானம் செய்யப்பட்டு இருக்கவில்லை.	மாற்று நீர் வழங்கல் செயற்றிட்டத்திற்காக செய்யப்பட்ட செலவு காணி மற்றும் காணிகள் மேம்படுத்தலுக்குரிய ஆகுசெலவ என்பதால் காணி மற்றும் காணி மேம்படுத்தலின் கீழ் மூலதனமாக்கப்பட்டுள்ளது.	சரியான பிரிவின் கீழ் அடையாளம் காணப்பட்டு, வருடாந்தம் தேய்மானம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(உ)	மாற்று நீர் வழங்கல் செயற்றிட்டத்திற்கான கொடுப்பனவுப் பட்டியல்களை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 5,078,042 தாமதக் கட்டணம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.	தாமதக் கட்டணம் செலுத்துவது தொடர்பில் இறுதித் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்காத காரணத்தால் தாமதக் கட்டணத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை.	தாமதக் கட்டணத்தை துல்லியமாக அடையாளம் காணப்பட்டு, கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதிக்குரிய நடைமுறைக் கணக்குகள் 05க்குரிய கூட்டுத் தொகை ரூபா 4,167,872 ஆன அடையாளம் காணப்படாத 129 வைப்புக்கள் அடையாளம் காணப்பட்டு வருமானத்திற்குள் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	அடையாளம் காண முடியாதுப்போன வைப்புத்தொகைகள் 2025 ஆம் ஆண்டில் ஏனைய வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள வைப்புத்தொகைகள் எதிர்காலத்தில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	வங்கி இணக்கக் கூற்றில் உள்ளடங்கும் அடையாளம் காணப்படாத வைப்புக்களை அடையாளம் கண்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

விடயம்	நிதிக் கூற்றின் படி பெறுமதி (ரூபா)	தொடர்புடைய அறிக்கைகளின்படி பெறுமதி (ரூபா)	வித்தியாசம் (ரூபா)	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் வருமானம்	ரூபா 22,544,423	ரூபா 22,066,723	ரூபா 477,700	இந்த வித்தியாசத்திற்கு காரணம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பட்டப்பின் படிப்பு பாடநெறி வருமானத்திற்குள் கற்கைப் பிரதிகளுக்கான வரவுகள், காலாவதியான காசோலைகளை வருமானமாக மீண்டும் அறிக்கை இடல் மற்றும் நிலையான வைப்புகளுக்காக கிடைத்த வட்டி வருமானம் ஆகியவை அடங்கும்.	நிதிக் கூற்று மீதிகளுடன் உரிய பிரிவுகளின் தகவல்களை ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

1.6 அதிகாரம் கிடைக்கப்பெறாத கொடுக்கல் வாங்கல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் VIIஆவது அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறாது பல்கலைக்கழக பதவியணிக்கு வீட்டு வாடகைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மீளாய்வாண்டில் 126 அதிகாரிகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 8,759,354 வீட்டு வாடகையும் உட்பட 2017 ஆம் ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதி வரை வீடு வாடகைக் கொடுப்பனவுகளாக மொத்தம் ரூபா 89,140,826 செலுத்தப்பட்டுள்ளது.	ஆமைச்சரவைப் பத்திர இல.2004/ED/HE/45 இன் பிரகாரம் பல்கலைக்கழக மாணவமாணவிகள் மற்றும் பதவியணிக்காக தங்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆரம்ப கட்டத்தில் பெறுகை செயல்முறையின்படி, தங்குமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஊழியர்கள் அதிகரிக்கப்பட்ட பின்னர் பல்கலைக்கழகத்தின் வீட்டு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நிருவாக சபையின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2017 ஆம் ஆண்டு முதல் உத்தியோகத்தரினால் செலுத்தப்படும் வீட்டு வாடகைப் பணத்தின் ஒருபகுதியை மீளளிப்பு செய்யப்பட்டது.	பலல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கா ன தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனா ன தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணக் குறிப்பு 104(1)	கூட்டுத்தொகை ரூபா 3,368,398 பெறுமதியுடைய கணினி உபகரணங்கள் உருப்படிகள் 98 கொடுக்கப்பட்டிருந்த திணைக்களங்களிலோ பிரிவுகளிலோ அவை பௌதீக ரீதியில் இல்லை என்பதாக மறுமதிப்பீட்டு குழுவினால் அடையாளம் காணப்பட்ட காரணத்தினால் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் இருந்து நீக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கான காரணம் சரியாக அறிந்து கொள்ள மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளம் கண்டுகொள்ள	இந்த கணினி உபகரணங்கள் உருப்படிகள் 98 இற்குள் 40 உருப்படிகள் UPS ஆகும். அவை பௌதீக ரீதியாக இருக்கின்றதா என்பது பற்றி குறித்த பிரிவுகளிலிடம் வினவப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப அடுத்த கட்ட நடடிக்கைகள் எடுக்கப்படும்.	தொலைந்து போன கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்க ள் தொடர்பாக நிதி பிரமாணக் குறிப்பின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	அதற்கான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு 2024 டிசம்பர் 31ஆம் திகதியளவிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.		
(ii) நிதிப்பிரமாணக் குறிப்பு 571	பல்வேறு கட்டுமானம், வழங்கல் மற்றும் சேவைகளுக்கு கொடுப்பனவுகள் செலுத்தும் போது, தக்கவைத்துக் கொள்ளப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 23,953,831 காலாவதியாகியுள்ளதுடன் 54 தக்கவைப்புக்கள் நிதிப் பிரமாணக்குறிப்பின் படி தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	குறித்த வழங்குநர்களுக்கு 2024 ஆம் ஆண்டில் மீண்டும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதற்கு பதிலளிக்கும் வழங்குநர்களுக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் மீதமுள்ள தொகை அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்படும்.	நிதி பிரமாணக் குறிப்பின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) பலல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை			
(i) Vஆவது அத்தியாயத்தின் 7.6 மற்றும் 7.8 ஆம் பிரிவுகள்	2024 டிசம்பர 31 திகதியில் உள்ளவாறான பிணைமுறி ஒப்பந்தங்களை மீறியதற்காக 13 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 106,248,535 ஐ அறவிட்டுக் கொள்வதற்கும். அவர்கள் சேவையை விட்டு விலகிச் சென்றவர்களாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	குறித்த உத்தியோகத்தர்களின் பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்தின் மீதிகளில் இருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணம் உள்ளது.	தாபன விதிக்கோவை இன் பிரகாரம் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) VIIஆவது அத்தியாயத்தின் 7.3 (அ) பிரிவு மற்றும் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதிய இல. 2019/09 கொண்ட தாபன சுற்றறிக்கை கடிதத்தின் 1.i பிரிவு	பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான உத்தியோகப்பூர்வ வாசஸ்த்தளம் வழங்கப்படும் போது உத்தியோகத்தரின் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் நூற்றுக்கு பத்து (10) வீதத்திற்கு சமமான தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு பதிலாக பல்கலைக்கழகத்தினால் விதித்துக் கொள்ளப்பட்ட துணை விதிச் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகப்பூர்வ வாசஸ்த்தளங்களை வாடகை	பல்கலைக்கழக சுற்றறிக்கைகளின்படி கட்டணங்கள் அறவிடப்படாவிட்டாலும், பல்கலைக்கழகத்தை நடாத்திச்செல்ல வேண்டிய தேவைப்பாட்டின் அடிப்படையில் வீட்டு வாடகை குழுவின் மற்றும் நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்தடன்	தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		அறவிட்டுக் கொள்ளல் காரணமாக துணைவேந்தர் உள்ளிட்ட 69 அதிகாரிகளிடம் இருந்து மீளாய்வாண்டில் ரூபா 4,587,777 தொகை குறைவாக உத்தியோகப்பூர்வ வாசஸ்த்தள வாடகைகளாக அறவிடப்பட்டுள்ளது.	கட்டணங்கள் அறவிடப்படுகின்றது.	
(இ)	2015 ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதிய இல. 15/2015 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை	விலங்கியல் மற்றும் ஏற்றுமதி விவசாயம், பிரயோக விஞ்ஞானம், முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பக் கல்வி பீடங்களில் 2023/2024 கல்வியாண்டின் முதல் பருவத்தேர்வின் இறுதிப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் 05 முதல் 07 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டிருந்தத. இரண்டாம் பருவத்தேர்வின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பரீட்சைகளை நடாத்தி 2025 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதியளவில் தாமதக் காலம் 06 மாதங்களை தாண்டி இருந்தும் கூட பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் அதிகரிப்புடன் ஒப்பிடும்போது கல்விசார் பதவியணி போதுமானதாக இல்லாமை, ராஜினாமா செய்த ஊழியர்களுக்கு பதிலாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இடமளிக்காமை போன்ற காரணங்களால் வெளிப்புற விரிவுரையாளர்களின் சேவையை பெற நேரிட்டது.	உரிய சுற்றறிக்கையின் படி பரீட்சை பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2024 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதிய இல. 01/2024 கொண்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 4.3 பந்தி.	திறைசேரி அங்கீகாரம் இன்றி மாதாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 18 வாகனங்களுக்கு பல்கலைக்கழக மூலம் மீளாய்வாண்டில் ஜனவரி முதல் ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை மொத்தம் ரூபா 19,910,057 வாடகை செலுத்தப்பட்டுள்ளது.	பல்கலைக்கழக விடயங்களுக்காக வாகனங்களை கொள்வனவு செய்ய பொது திறைசேரியில் இருந்து அங்கீகாரம் பெறுவதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன் அதற்கு பொது திறைசேரியினால் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பாவிக்குமாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.	உரிய சுற்றறிக்கை இன் படி அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(உ)	2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதிய இல. 03/2017 கொண்ட அரச நிருவாக சுற்றறிக்கை.	குல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் வரவு மற்றும் புறப்படுதல் கைவிரல் பதிவு இயந்திரம் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் மீளாய்வாண்டில் சம்களம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 1,165,814,127 செலுத்தப்பட்டுள்ளது.	ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும், சம்பளம் மற்றும் ஊதியங்களை செலுத்துவதற்கு முன்னர் சம்பளப் பிரிவினால் உரிய கல்விசார் பிரிவின் பிரதானிகளிடமிருந்தும் கல்விசார் பதவியணியின் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர் என சான்று பெறப்படுகிறது.	உரிய சுற்றறிக்கை இன் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	2019 ஆம் ஆண்டு ஜுலை 25ஆம் திகதிய இல.SC&PMU/Grant/19 மற்றும் 2020 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய இல.SC&PMU/Grant/20 வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதங்கள் மற்றும் 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 02 ஆம் திகதிய இல.ERD/AE/GEN 16 கொண்ட நிதி அமைச்சின் கடிதம்	பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அறிவிக்காமலும் இணக்கப்பாடு இல்லாமலும் வெளிநாட்டு மானியங்களின் அடிப்படையில் 06 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்துள்ளதுடன் அதில் 03 செயற்றிட்ங்கள் மீளாய்வாண்டில் ரூபா 53,323,221 தொகை வெளிநாட்டு மானியங்கள் கிடைக்கப்பட்டு இருந்தன. இதற்கு மேலதிகமாக வேறு வெளிநாட்டு செயற்றிட்டங்கள் 02 மூலம் ரூபா 22,822,930 பெறுமதியான பொருட்கள் நேரடியாக பல்கலைக்கழகத்திற்கு பெறப்பட்டு இருந்தன.	2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய சுற்றறிக்கைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	2023 ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதிய இல.BD/HRD/126/214/19/2023 கொண்ட திறைசேரியின் செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளரை விழிக்கப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தின் 5ஆவது பந்தி	பிணைமுறி ஒப்பந்தங்களை மீறியதன் அடிப்படையில் 10 விரிவுரையாளர்கள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்டு இருந்த ரூபா 25,525,852 தொகையை திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 737 இன் படி நடவடிக்கை எடுக்கப்படும். அந்த சுற்றறிக்கை இன்றுவரை இடைநிறுத்தப்படாததால், பொது திறைசேரிக்கு பணம் அனுப்ப முடியாதுள்ளது.	சுற்றறிக்கை இன் படி அறவிடப்பட்ட பணத்தை திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஏ)	2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 01ஆம் திகதிய இல.DMA/2009(02) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கை	மீளாய்வாண்டின் டிசம்பர் 31 திகதியில் உள்ளவாறான பெறுமானம் ரூபா 3,684,088,688 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளாந்துவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட்டு இருக்கவில்லை.	ஒவ்வொரு பிரிவின் சொத்துக்களின் மறுமதிப்பீட்டை முடித்து, நிலையான சொத்துக்கள் மென்பொருளை நாளாந்த வரையாக்கள் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அச்சிடப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு பொதுவான நிருவாகப் பிரிவினால் உரிய பிரகாரம் பராமரிக்கப்படுகிறது.	ஊரிய சுற்றறிக்கை இன் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயல்பாட்டு விளைவு ரூபா 65,566,469 குறைவு இருந்ததுடன் அதற்கு மறுபுறம் கடந்த ஆண்டில் ரூபா 310,420,127 மேலதிகம் காணப்பட்டது. அதன்படி, மீளாய்வாண்டில் நிதி விளைவில் ரூபா 375,986,596 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட மூலதன வருமானம் குறைதல் மற்றும் மொத்த செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் பிரதானமான காரணங்களாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக குறைவான பயன்பாடுள்ள, பயன்படுத்தாதுள்ள மற்றும் பழுதுபார்த்து மீள பயன்படுத்தக் கூடிய நிலையில் 13 Digital Duplicator இயந்திரங்கள் இருக்கையில் முறையான பெறுகை செயல்முறையைப் பின்பற்றாமல் மீளாய்வாண்டில் பழைய மாதிரியைச் சேர்ந்த 07 Digital Duplicator இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 6,979,700 சிக்கனமற்ற செலவை ஏற்படுத்துதல்.	2024 மார்ச் 28 ஆம் திகதி நடைபெற்ற 114 ஆவது நிதிக்கழுவின்போது இந்த இயந்திரங்களை கொள்வனவு செயல்முறையை பரிசோதிப்பதற்கும் பொதுவான விவரக்குறிப்புகளைத் தயாரிப்பதற்கும், மூன்று பீடங்களுக்கு பொறுப்பான பீடாதிபதிகளை கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அதன்படி, குழுவின் தலைவரின் பரிந்துரையுடன் விவரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, (Shopping Procurement Method) உரிய முறையை பின்பற்றி இந்த இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.	சிக்கனமற்ற செலவுகள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட்டு, பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏதேனும் இழப்புக்கள் ஏற்பட்டிருப்பின் பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	கடந்த ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு, பயன்படுத்தப்படாத படுக்கைகள் மற்றும் மெத்தைகள் பல்கலைக்கழக விடுதிகளில் குவிந்து கிடந்த போதிலும், மீளாய்வாண்டின் ஜனவரி மாத்தில் ரூபா 1,647,000 பெறுமதியுடைய 300 மெத்தைகள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்ததுடன் 2024 ஆம் ஆண்டு டிசம்பர்31 ஆம் திகதியளவிலும் கூட 173 மெத்தைகள் களஞ்சியத்தில் பயன்படுத்தாமல் காணப்பட்டன.	2023.11.08 ஆம் திகதி பிரதி பதிவாளர் (பொது நிருவாகம்) அவர்களால் 2023/2024 கல்வியாண்டிற்கு முன்னர் மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கும்போது மெத்தைகளை கொள்வனவு செய்ய துணைவேந்தருக்கு ஒரு கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டு பெறப்பட்ட அங்கீகாரத்தின்படி, கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.	பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்படும் இழப்புக்கள் அதற்கு பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து மீள அறவிட்டுக் கொள்ள வேண்டும்.

3.2 அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கேள்விப்பத்திர நிபந்தனைகளின்படி, உணவகச் சேவைகளை உரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு தேவையான ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கும், சட்டப்பூர்வமான ஊதியத்தை செலுத்துவதற்கும் உணவகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தினந்தோறும் சுத்தம் செய்வதற்கும் ஒப்பந்ததாரர்கள் இணக்கம் தெரிவித்திருந்த போதிலும், சமையல் வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 13 உழியர்களுக்கு ரூபா 7,874,463 வும், உணவகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சுத்தம் செய்யும் பணிகளுக்காக துப்புறவு சேவைக்குரித்தான 08 ஊழியர்களுக்கு ரூபா 3,279,892 வும் சம்பளமாகவும் கொடுப்பனவுகளாகவும் செலுத்தப்பட்டு இருந்தன. இதன்படி 2020 ஆம் அண்டு முதல் 2023 அம் ஆண்டு டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்காக பல்கலைக்கழகத்தினால் செலவு செய்யப்பட்ட மொத்தத்தொகை ரூபா 11,154,355 பணம் பல்கலைக்கழக நிதியத்திற்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளது.	உணவகங்களின் சமையல் வேலைகளுக்காக வழங்கப்பட்ட ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் 2024 பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அதுவரை செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை மீள அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு உரிய தரப்பினர்களுக்கு அறவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் அதை மீளச் செலுத்த மறுத்துவிட்டனர். ஆகையால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக பல்கலைக்கழகத்தின் நிதிக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உணவகத்தின் வெளிப்புறத்தை சுத்தம் செய்யும் பணியை பல்கலைக்கழகமே செய்ய வேண்டும் என்பதால், அவர்கள் சார்பாக செலுத்தப்படும் கட்டணம் சரியானது.	பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் அதற்கு பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஆ)	உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்தும் (AHEAD) திட்டத்தின் கீழ், பதவியணியின் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு கலாநிதி பட்டத்தை மேற்கொள்வதற்காக ரூபா 35,729,187 செலவழித்த விரிவுரையாளர்கள் 04 பேர் சேவையை விட்டு விலகிச்சென்ற காரணத்தினால் அவர்களுக்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவாக மாறியுள்ளது.	விரிவுரையாளர்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 38,236,650 புலமைப்பரிசிலின் பெறுமதியை அவர்களின் பிணைமுறிப் பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அந்தத் தொகையை அவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்றிட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட தேவையற்ற செலவுகளை உடனடியாக அறவிட்டுக் கொள்வதற்கும்,எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்

			கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதிய இல. UGC/IDD/GEN/01 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரின் கடிதத்தின்படி 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் திகதி முதல் காணிகள் கையகப்படுத்தும் நடவடிக்கைகளின் மேற்பார்வைக்காக ஓய்வுபெற்ற மாகாண காணி ஆணையாளர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார் என்பதுடன் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் போது 2018 ஆம் ஆண்டு ஜூலை 18 திகதிய இலக்கம் 3/2018 கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு மாறாக மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதி வரை மொத்தம் ரூபா 4,128,333 கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டுள்ளது. காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக அதிகாரி ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதால் பல்கலைக்கழக நிதியத்திற்கு இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.	பல்கலைக்கழக கட்டுமானத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் உரிமையைப் பெறுவதற்கான செயல்முறையை விரைவுபடுத்துவதற்கும், கையகப்படுத்தும் செயல்முறையை முறையாக மேற்கொள்வதற்கும், விசேட நிபுணத்துவ அறிவுடைய ஓய்வூபெற்ற காணி ஆணையாளர் ஒருவர் பல்கலைக்கழக நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்துடன் 2017 ஆம் ஆண்டு சம்பர் 11 திகதி நியமிக்கப்பட்டார். பல்கலைக்கழகத்தின் காணி கையகப்படுத்தும் செயல்முறை இறுதி கட்டத்தில் இருப்பதால், 2024 ஆம் ஆண்டு நவம்பர் 04 திகதி முதல் 2025 ஆம் ஆண்டு மே 03 ஆம் திகதி வரை ஒப்படை அடிப்படையில் இவர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.	காணிகள் விரைவாக கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால் முறையற்ற ஆட்சேர்ப்பு தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளை அடையாளம் கண்டு தேவையான விசாரணைகளை நடாத்த வேண்டும்.

3.3 முகாமைத்துவ வினைத்திறன்யின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	2022/2023 மற்றும் 2023/2024 கல்வியாண்டுகளுக்கு 16 பட்டப்பாடநெறிகளுக்கு 3328 மாணவர்களைப் பதிவு செய்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டு இருந்த போதிலும், 2645 மாணவர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்ததால் முழு கொள்ளளவும் பயன்படுத்தப்படவில்லை. அதன்படி, எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 21 சதவீதமாக பதிவு செய்யப்படாத மாணவர்களின் எண்ணிக்கை இருந்ததுடன் பட்டப்பாடநெறிகளுக்கு வெளிநாட்டு மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியாதுப்போகியுள்ளது.	பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாணவர் பதிவுப் பட்டியல்களின்படி பட்டப்பாடநெறிகளுக்கு மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய பாடநெறிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையை முழுமையாக ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான விடுதி வசதிகள் போதுமானதாக இல்லாததால் 2287 மாணவர்களில் 1783 மாணவர்களுக்கு வாடகை அடிப்படையில் 64 விடுதிகள் வாடகைக்கு பெறப்பட்டு வருடாந்த வாடகையாக ரூபா 87,354,376 மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டுள்ளது. புதிய மாணவர் விடுதிகளைக் கட்டுவதில் கவனம் செலுத்தப்படாததால், 2008 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 அம் திகதி வரை செலவிடப்பட்டுள்ள மொத்தம் ரூபா 376,153,028 ஆனதுடன் அந்த சகல விடுதிக்கும் பாதுகாப்புச் சேவைகள், சுகாதார சேவைகள் மற்றும் நீர் மற்றும் மின்சாரம் போன்ற பிற பயன்பாட்டு சேவைகளை அந்த விடுதிகள் ஒவ்வொன்றிற்கும் வழங்க வேண்டியிருந்தது.	மாணவர்கள் 502 பேர்களுக்கு விடுதி வசதிகள் கட்டப்பட்டுள்ளதுடன் ஏனைய மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள குடியிருப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 2015 முதல் விடுதிகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றதுடன் 12 ஏக்கர் காணியை கையகப்படுத்துவதன் மூலம் சுமார் 2000 மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.	புதிய மாணவர் விடுதிகளை நிர்மாணித்து மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதிகளைக் கொண்ட விடுதி வசதிகளை வழங்குவதற்கும், இதன் மூலம் மேலதிக செலவுகளை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	கணினி மற்றும் உபகரண மறுமதிப்பீட்டுக் குழுவால் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் திகதி துணைவேந்தரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, பல்வேறு மானியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தம் ரூபா 3,928,819 பெறுமதியுள்ள உருப்படி 34 கணினி உபகரணங்கள் மற்றும் 02 இரசாயனகூட கற்பித்தல் உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டியவை என அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் அந்த உபகரணங்கள் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியளவிலும் கூட பழுதுபார்ப்பதற்கு உரிய பிரிவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக பொது நிர்வாக பிரிவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	கணினி உபகரணங்களை விரைவாக பழுதுபார்த்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 ஒப்பந்த நிருவாகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
மாற்று நீர்வழங்கல் திட்டத்திற்கான மூலதன மானியங்களின் கீழ் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட போதிலும். ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த பில்களை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, பெறுமதி சேர் வரியாக ரூபா 750,346 மீளாய்வாண்டில் ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாக செலுத்த வேண்டியிருந்தது, மேலும் தாமதம் காரணமாக ஒப்பந்ததாரருக்கு செலுத்த	பல்கலைக்கழத்திற்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையிலான தாமதக் கட்டணத்தை செலுத்துவது தொடர்பிலான பிரச்சினையைத் தீர்க்க நியமிக்கப்பட்ட பிணக்குகள் தீர்ப்பாயத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், 2025.02.28 ஆம் திகதி கூடிய பல்கலைக்கழக நிர்வாகக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருப்பது சட்டமா	தாமதக் கட்டண தொடர்பான பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கும், கட்டணம் தாமதமடைதல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய

	வேண்டிய செயற்றிட்டட ஆலோசகரால் 2023 ஒக்டோபர் 19 திகதி சான்றளிக்கப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா 5,078,042 ஆகும். மேலும், தாமதக் கட்டணம் தொடர்பான பிணக்கை தீர்ப்பதற்காக இரு தரப்பினரும் தலா ரூபா 500,000 வீதம் செலுத்தி பிணக்குகளை தீர்க்கும் ஒரு தீர்ப்பாளரை (Dispute Adjudicator) நியமிக்கப்பட்டுள்ளார் என்பதுடன் மேற்கண்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 3,643,953 தாமதக் கட்டணமாக ஒப்பந்ததாரருக்கு செலுத்தும்படி தீர்ப்பாளர் மூலம் விதிக்கப்பட்டுள்ளது.	அதிபரின் ஆலோசனையைப் பெற்று, இது தொடர்பாக மேலும் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கும் படியாகும்.	அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் பதவிகள் முறையே 86 மற்றும் 77 பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் மருத்துவ பீடம் ஆகியவற்றுக்காக அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக கல்விசார் பதவியணியின் பதவிகள் முஜறயே 05 மற்றும் 03 வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் ஏனைய பீடங்களின் அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக கல்விசாரா பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 13 மேலதிகம் காணப்படுகின்றது.	புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், உரிய அங்கீகாரம் கிடைத்த பிறகு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். நிரந்தர ஊழியர்கள் வெளியேறுதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர வெற்றிடங்களை நிரப்ப முடியாததால், தொடர்புடைய வெற்றிடங்கள் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு கல்வி நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுவதால், இது கல்விசார் பதவியணியின் மேலதிகம் அல்ல.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குள் செயற்பட்டு அத்தியாவசிய பதவிகளுக்காக தகுதியான அதிகாரிகளை அவசரமாக ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யாத ஒரு விண்ணப்பதாரர் 2008 செப்டம்பர் 05 திகதி மூத்த உதவிப் பதிவாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதுடன் நியமனத்துடன் தொடர்புடைய கல்வித் தகுதிகள் மற்றும் சேவை அனுபவத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் துல்லியம் மற்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பூர்த்தி ஆகியவற்றை சரிபார்க்காமல் அவரது சேவை 2012 ஜூலை 13 திகதி முதல் இவரின் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. அவர் 2019 ஒக்டோபர் 07 திகதி முதல் பிரதி பதிவாளர் பதவிக்கு பதவியுய்வு	உரிய பதவிகளுக்கான நியமன அதிகாரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவாகும் என்பதுடன் பல்கலைக்கழகத்தினால் பிரதி பதிவாளர் பதவியில் நிரந்தரமாக்கும் சந்தர்ப்பத்தில் அவரினால் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த கல்வித் தகைமைகளின் துல்லியத்தை உரிய நிறுவனங்களில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பதவிகளுக்குரிய கடமைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அந்தப் பதவிகளுடன்	முறையற்ற ஆட்சேர்ப்பு குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், ஏற்பட்ட இழப்புகளை அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட

	வழங்கப்பட்டு, அன்றிலிருந்து அந்தப் பதவியில் நிரந்தரமாக்குவதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த அதிகாரிக்காக 2008 ஒக்டோபர் 15 திகதி முதல் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதிற்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 25,658,781 செலுத்துவதற்கும், இல. 01/2016 கொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் கீழ் சலுகை நிபந்தனையின் அடிப்படையில் 50 சதவீத வரி விலக்குடன் 30,000 அமெரிக்க டொலர் பெறுமதியில் மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கும் வெளிநாட்டு பயிற்சி மற்றும் கூட்டங்களில் பங்கேற்க வாய்ப்புகள் உள்ளிட்ட வசதிகளை வழங்கவும் பல்கலைக்கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைப் பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.	வேண்டும்.
(இ)	மீண்டும் பத்திரக்கை விளம்பரங்களை பிரசுரித்து விண்ணப்பங்களை கோர வேண்டும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறவித்திருந்த போதிலும், முகாமைத்துவ கல்வி பீடத்தின் ENGLISH LANGUAGE & LINGUISTICS பாடத்திற்கான மூன்றாவது பிரிவின் கீழ் நேர்காணலுக்கு அழைக்கப்பட்ட இரண்டு விண்ணப்பதாரர்கள் விரிவுரையாளர் (தற்காலிக) பதவிகளுக்காக 2024 ஜனவரி 16 ஆம் திகதி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 1,924,338 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளதுடன் ENGLISH LANGUAGE & EDUCATION பாடத்திற்கான கல்விசார் பதவியணி ஆட்சேர்ப்பு செய்யும் போது, தகுதியுடைய முதல் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் இருந்தபோதிலும், இஇரண்டாவது பிரிவின் கீழ் ஒரு விண்ணப்பதாரர் 2024 மார்ச் 15 ஆம் திகதி முதல் விரிவுரையாளர் (தற்காலிக) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மீளாய்வாண்டில் ரூபா 791,560 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 08/2005 மற்றும் 17/2017 இன் விதிகளின்படி,	பல்கலைக்கழகத்தின் தேவைப்பாட்டிற்கு அமைய பல்கலைக்கழக மனியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கும் வரை நிருவாக குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு விரிவுரையாளராக (தற்காலிகமாக) ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு பதவிக்கு உரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. ENGLISH LANGUAGE & LINGUISTICS பாடம் தொடர்பாக 2024.11.08 திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட 2024.07.18 ஆம் திகதிய UGC/HR/4/4/26/Mgt கொண்ட கடிதத்திற்கு பதில் அனுப்பப்பட்டிருந்தாலும் இதுவரை அதற்கு பதில் கிடைக்கவில்லை. ENGLISH LANGUAGE & EDUCATION பாடம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெறுவதற்கு 2024.02.19ஆம் திகதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில்	முறையற்ற ஆட்சேர்ப்பு குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், ஏற்பட்ட இழப்புகளை அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	அதற்கான சிறப்பு நியாயப்படுத்தல் காரணங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து அதற்குரிய அங்கீகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை.	இருந்து 2024.04.08 ஆம் திகதிய இலக்கம் UGC/HR/4/4/26/Mgt கொண்ட பதில் கடிதம் கிடைத்ததுடன் அதற்கு 2024.11.08 ஆம் திகதிய பதில் அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்தக் கடிதத்திற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.	
(ஈ)	2009 மார்ச் 02 ஆம் திகதி உதவி நூலகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரு அதிகாரி, தகுதிகாண் காலத்தில் தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யாததால் 2017 மார்ச் 02 ஆம் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டு, அந்த திகதியிலிருந்து 2018 ஜுலை வரை ஒப்பந்த அடிப்படையில் உதவி நூலகராக நியமிக்கப்பட்டு, மாதாந்தம் ரூபா 51,130 கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. சிரேஸ்ட உதவி நூலகர் பதவிக்காக 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் 2010 ஏப்ரல் 23 ஆம் திகதிய இல. 921 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் படி தகுதிகள் பூர்த்தி செய்யாத இந்த அதிகாரியை 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் உதவி நூலகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு, 2021 ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் மூத்த உதவி நூலகர் பதவிக்காக நியமிப்பதற்கும், 2022 மார்ச் 02 ஆம் திகதி முதல் பதில் கடமைபுரியும் நூலகதிபராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 2018 ஆகஸ்ட் முதல் மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதி வரை ரூபா 21,423,102 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டுள்ளதுடன் உத்தியோகபூர்வ வாசஸ்த்தளம், மாதாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. மீண்டும் ஆட்சேர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பிணைமுறி ஒப்பந்தங்களை மீறியதால் பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 5,491,082 தொகையில் ரூபா 1,372,770 மட்டுமே அறவிடப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள ரூபா 4,118,312 இற்காக 2014 மார்ச் 24 திகதிய இல. 03/2014 கொண்ட	தேவையான தகுதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனும் அரச கண்காய்வு ஐயவினாவும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின்போது, சம்பந்தப்பட்ட அதிகாரியின் தகுதிகள் ஆட்சேர்ப்பு செயல்முறைக்கு ஏற்ப பொருந்தவில்லை எனும் முன்மொழிவும் காரணமாக இது தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக நிருவாகக் குழுவுக்கு அனுப்பும்படி முன்மொழியப்பட்டது. அதன்படி, இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உபகுழு நியமிக்கப்பட்டு, நிருவாகக்குழு பத்திர இல. C/180/05/25 மூலம் உபகுழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் பின்வருமாறு தகுதிகாண் காலத்தில் கலாநிதி பட்டப்படிப்பை முடிக்க முடியாததால், 2017 மார்ச் 02 முதல் சேவையை நிறுத்தவும், 2017 மார்ச் 02 முதல் 2018 மார்ச் 01 வரை ஒப்பந்த அடிப்படையில் உதவி நூலகர் பதவியை வழங்கவும், அதை 2018 ஆகஸ்ட் 31 வரை நீடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. "மூத்த உதவி நூலகர் தரம் II" பதவிக்கு 2018 ஜனவரி 21 திகதி தேசிய பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின்படி விண்ணப்பித்ததுடன் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் நூலகரின் பரிந்துரையின் அடிப்படையில் அவர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டார். அதன்படி, மூத்த உதவி நூலகர் பதவிக்கு நியமிக்க தேர்வுக்	தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும் என்பதுடன் முறையற்ற ஆட்சேர்ப்பு குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு, பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், ஏற்பட்ட இழப்புகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி மீண்டும் பிணைமுறி ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	குழுவின் பரிந்துரையின் பேரில், 2018 ஆகஸ்ட் 01 திகதி முதல் மூத்த உதவி நூலகர் பதவிக்கு அவர் மீண்டும் பணியமர்த்தப்பட்டார். அவர் பூர்த்தி செய்துள்ள கலாநிதி பட்டத் தகுதியைக் கருத்தில் கொண்டு, 2018 ஆம் ஆண்டு மூத்த உதவி நூலகர் பதவிக்கு அவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆறு வருட அனுபவம் 2018 ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் மூன்று வருடங்கள் உதவி நூலகர் பதவிக்கு (நிலைமாறு தரம்) உள்ளடக்கப்படடு 2021 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் அமுலில் இருக்கும் வகையில் மூத்த உதவி நூலகர் பதவிக்கு (II தரம்) பதவியுயர்வு என திருத்தம் செய்வதற்கு 180ஆவது நிருவாகக்குழு தீர்மானித்துள்ளது.	
(உ)	பயிற்சி தொழில்நுட்ப அதிகாரி தரம் II B பதவிக்கு 2016 ஏப்ரல் 01 திகதி நியமனப்பெற்ற விண்ணப்பதாரர் சமர்ப்பித்த கல்விச் சான்றிதழ்கள் போலியானவை என்பதால் அவற்றைச் சரிபார்ப்பதில் பல்கலைக்கழகம் 2021 ஒக்டோபர் வரை ஏற்பட்ட தாமதம் காரணமாக அந்தக் காலத்திற்கு மொத்தம் ரூபா 3,275,787 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தப்பட்டுள்ளது. சான்றிதழ்களை குறிப்பிட்ட காலத்திற்குள் சரிபார்க்காமல் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும், பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பை சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும், 2023 டிசம்பர் 31 திகதியளவிலும் கூட பல்கலைக்கழகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.	பரீட்சை பெறுபேறுகளில் உள்ள முரண்பாடு குறித்து விசாரிக்க 2021.07.07 திகதி பதுளை மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதுடன் அது தொடர்பான விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது. பதுளை காவல் நிலையத்தின் சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, பதுளை நீதவான் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்து வழக்குத் தொடர்ந்துள்ளார். நீதவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.	பொறுப்பான தரப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஊ)	முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் தொழிநுட் உத்தியோகத்தர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டு இருக்காத சநதர்ப்பத்தில் மூலதன சேவைகள் மற்றும் கட்டிடம் மற்றும் பராமரிப்பு பிரிவுகளுக்காக நிருவாகக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆகக் குறைந்த கல்வித் தகைமைகளையோ பூர்த்திசெய்யாத வயது வருடங்கள் 49 ஐ தாண்டிய ஒருவர் 2019 ஏப்ரல் மாதம்	தினசரி வருகைப்பதிவு கைரேகை இயந்திரத்தில் பதிவு செய்யப்பட்டு, பல்கலைக்கழக அமைப்பில் உள்ள தொடர்புடைய பதவிகளுடன் ஒப்பிடுவதன் மூலம் கொடுப்பனவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. கட்டுமானப் பணிகள் முடிந்த பிறகும் பராமரிப்பு காலம் குறைவாக இருந்ததால், திட்டத்தை	முறையற்ற ஆட்சேர்ப்பு குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு, பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் ஏற்பட்ட

10ஆம் திகதி முதல் ஆட்சேர்ப்பு செயய்யப்பட்டு நாளாந்த வருகைப்பதிவு சான்றுபடுத்தப்படாமல் மாதாந்த கொடுப்பனவுகளாக மீளாய்வாண்டில் டிசம்பர் 31ஆம் திகதி வரை ரூபா 3,447,250 செலுத்தப்பட்டு இருந்தது. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இரண்டாம் கட்ட கட்டுமான செயற்றிட்டங்கள் மேற்பர்ரவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இருந்த இந்த அதிகாரிக்காக பல்கலைக்கழகத்தின் எந்தவொரு கட்டுமான செயற்றிட்டமும் நடைமுறைப்படுத்தப்படாத 2022 நவம்பர் முதல் 2023 செப்டம்பர் வரையான காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டு இருந்து மாதாந்த கொடுப்பனவு மொத்தம் ரூபா 870,000 ஆனது.	மேற்பார்வையிட இந்த அதிகாரி நியமிக்கப்பட்டார்.	இழப்புகளை அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.6 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
பதில் கடமைபுரியும் நூலக அதிபதியின் உத்தியோகப்பூர்வ வாகனமாக மாதாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்ட ஒரு கார் வழங்கப்பட்டு இருந்ததுடன் 2023 ஒக்டோபர் 07 ஆம் திகதி தனிப்பட்ட விடயத்திற்காக அனுமதியின்றி அதிகாரி யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது ஏற்பட்ட விபத்தின் காரணமாக ரூபா 2,267,845 இழப்பு மதிப்பிடப்பட்டது. காப்பீட்டு நிறுவனம் மேற்படி இழப்பை ஈடுசெய்ய மறுத்ததால், வாகனத்தின் உரிமையாளர் மேற்படி இழப்பை ஈடுசெய்ய பல்கலைக்கழகத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 6.4 மற்றும் 6.5 இன் பிரிவுகள் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக்குறிப்பு 104(1) விதிகளைப் புறக்கணித்து, 2024 ஜுலை 15 ஆம் திகதி முதல் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு ஏழு ஆண்டு வருடாந்த விடுமுறையை அங்கீகரிக்க பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்ததுள்ளது. விபத்துக்குக் காரணமானவர்களைக் கண்டறிவதற்கான விசாரணைகள் 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரையிலும்கூட ஆரம்பிக்கப்படவில்லை. மேலும் அதிகாரியின் போக்குவரத்து	இது தொடர்பான வழக்கு இல.CL/92/2024 கொண்ட வழக்கு பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட வண்ணமுள்ளது. இந்த மோட்டார் வாகனம் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமானது அல்லாத வாடகை வாகனம் என்பதால்தாபன விதிக் கோவை/நிதிப் பிரமாணக்குறிப்பு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	நிதிப் பிரமாணக்குறிப்பு 104(1), 104(3), 104(4) மற்றும் அரசாங்க செலவு முகாமைத்துவ கொள்கையின்படி நடவடிக்கை எடுப்பதற்கும், வாடகை வாகனம் ஈடுபடுத்தியன் காரணமாக பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பை அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடயங்களுக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்ட வாகனம் மற்றும் பிற கூலி வாகனங்களை பயன்படுத்தியதற்காக விபத்து ஏற்பட்ட திகதியில் இருந்து 2024 ஜூலை 15 வரையும் ரூபா 2,341,066 செலவிடப்பட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 ஆண்டறிக்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2003 ஜூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 12 இன் பிரிவு 6.5.1 இன் படி, நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான வரைவு ஆண்டு அறிக்கை, 2025 ஜூலை 21 திகதியளவிலும் கூட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	தொடர்புடைய வருடாந்த அறிக்கையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உரிய சுற்றறிக்கை களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.